**பேருவளை நகர சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பேருவளை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள பேருவளை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபை நிதியத்தில் இருந்து நிர்மாணிக்கப்பட்ட ரூபா 5,666,640 கூட்டுத்தொகையான 05 செயற்திட்டங்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும். | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 39 நாட்குறிப்புக்களின் மூலம் ரூபா 19,201,200 தொகை கிடைக்க வேண்டிய இறைச்சிக் கடை வாடகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கில் ரூபா 13,964,570 ஆக அதாவது ரூபா 5,236,630 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 65 நாட்குறிப்புக்களின் மூலம் ரூபா 2,619,100 ஆன கிடைக்க வேண்டிய இறைச்சிக் கடை வாடகை, கேள்வி வைப்புக்களில் இருந்து ஈடுசெய்யப்பட்டிருந்த போதிலும் அது பேரேட்டுக் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 133,316 ஆன ஆயர்வேத களஞ்சிய பொருள் இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 27 ஊழியர்களிடமிருந்து சம்பளமற்ற விடுமுறையாக $122^{1/2}$ நாட்களுக்காக கிடைக்கப் பெற வேண்டிய ரூபா 141,510 தொகை கிடைக்க வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 04 கணக்கீடு விடயங்களின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும், அவற்றுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 2,190,160 வேறுபாடு காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) 03 கணக்கு விடயங்களின் பரீட்சை மீதிகளுக்கும் பேரேட்டுக் கணக்கின் மீதிகளுக்கும் இடையே ரூபா 1,171,700 வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு தொங்கல் கணக்குகளில் தீர்த்துவைக்கப்படாத செலவு மீதி ரூபா 205,995 ஆகும். | இந்த தொங்கல் கணக்கின் மீதி 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 21 நாட்குறிப்புக்களின் மூலம் முன்னைய காலப் பகுதிக்குரியதாக செலுத்தப்பட்ட ரூபா 190,083 சம்பளம் 2021 ஆம் ஆண்டின் செலவினமாகவும், கடன் கொடுத்தோரின் கீழ் பதியப்பட்ட தவறை சரிசெய்வதற்கு கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைப்பதற்கு பதிலாக தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 திசெம்பர் 24 ஆம் திகதிய இலக்கம் 2155/8 என்ற வர்த்தமானிப் பத்திரத்தின் விதி இலக்கம் 325 | உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் பெயரிடப்படுகின்ற உத்தியோகத்தர் ஆதனங்களை வாடகைக்கு வழங்குதல் அல்லது குத்தகைக்கு வழங்குதல் கேள்விக் குழுவிற்காக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக ஆதனங்களை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்கும் கேள்வி குழு நியமிக்கப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி நிர்வாக விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,368,388 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,168,141 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 15,208,192 | 15,208,192 | 16,305,655 | 16,305,655 | 15,219,000 | 15,219,000 | 15,804,162 | 18,471,762 |
| (ii) | வாடகை | 26,009,270 | 26,009,270 | 26,537,046 | 1,140,784 | 18,548,000 | 23,067,504 | 21,741,322 | 6,767,674 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 200,000 | 200,000 | 106,000 | 137,000 | 200,000 | 1,820,000 | 1,628,600 | 191,400 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,233,200 | 2,233,200 | 2,824,824 | 966,971 | 1.895,000 | 275,000 | 473,000 | (195,700) |
| | மொத்தம் | 43,650,662 | 43,650,662 | 45,773,525 | 18,550,410 | 35,862,000 | 40,381,504 | 39,647,084 | 25,235,136 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி கால பகுப்பாய்வின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு குறைந்த நிலுவை ரூபா 840,552 ஆகவும், 01-03 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 3,884,769 ஆகவும், 03-05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 3,012,967 ஆகவும், 05-10 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 6,393,709 ஆகவும் இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 2,081,672 ஆகும். | ஆதனவரி தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 43,000 ஆக இருந்ததுடன் ஆண்டில் எந்த ஒரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2022.10.22 மாதாந்த சபைக்கூட்டத்தில் பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பதிவழிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாடு அறுவைக் கட்டளைச் சட்டத்தின் 11 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறுவைகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட கால்நடைகளுக்கு 24 மணித்தியாலத்திற்கு முன்னர் பரிசோதனை செய்வதற்காக பொது சுகாதாரப் பரிசோதகருக்கு சமர்ப்பிக்கப் படாதிருந்ததுடன் மாட்டிறைச்சி போக்குவரத்துச் செய்தல் பொது சுகாதாரப் பரிசோதகரின் மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | மாடு அறுவைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொதுச் சந்தையில் மாட்டிறைச்சிக் கடையில் இறைச்சி விற்பனை செய்வதற்காக கேள்வியினைப் பெற்ற நபருக்கு சபை அதிகாரப் பிரதேசத்தில் இன்னுமொரு இடத்தில் மேலும் 09 இடங்களில் மாட்டிறைச்சியினை விற்பனை செய்வதற்காகவும் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் | தற்போது கேள்வியினைப் பெற்று பொதுச் சந்தையில் மாட்டிறைச்சி கடை மூடி வைக்காதிருக்காமல் தொடர்ந்தும் வியாபாரம் செய்வதற்காக திறப்பதற்கு நடவடிக்கை | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமான வழிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | கேள்வி பெற்ற பொதுச் சந்தையின் மாட்டிறைச்சிக் கடை மூடப்பட்டிருந்ததுடன் வாடகைப் பணமும் உரிய பிரகாரம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பேருவளை, மருதானையில் அமைந்துள்ள உடற்பயிற்சி நிலையத்திற்காக உடற்பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டில் ரூபா 382,900 செலவிடப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த உபகரணங்களின் பெறுமதி ரூபா 692,510 ஆகும். உடற்பயிற்சியளிப்பவர் ஒருவர் காணப்படாமையின் காரணமாக உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் கட்டிடம் பயனற்றுக் காணப்பட்டதுடன் உடயற்பயிற்சி உபகரணங்கள் நேரடியாக கடல் காற்றுக்கு உட்படுவதன் காரணமாக துருப்பிடித்தலுக்கும் உள்ளாகும் ஆபத்து காணப்பட்டது. | இந்த உபகரணங்களை பொருத்தமான இடத்திற்கு கொண்டு சென்று உடற்பயிற்சி நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடற்பயிற்சி நிலையத்தை ஸ்தாபித்து வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த நகர சபைக்குரிய பேருவளை பொல்கொட்டுவ இரண்டு மாடிக் கட்டிடம் காணக்காய்வுத் திகதி வரையிலும் எந்தவொரு அபிவிருத்தியோ அல்லது பழுபார்த்தலோ மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக கட்டிடத்தின் கீழ் மாடி வாரத்திற்கு ஒரு நாள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் மேல்மாடி விளைவற்றுக் காணப்பட்டது. | இந்தக் காணி தொடர்பாக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று காணப்படுகின்றமை யால் அபிவிருத்தி நடவடிக்கைகள் செய்யப்படவில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டியிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான வளங்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும் |
| (இ) | சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த பண்டாரவத்த மயான நிலம், பொது மலசல கூடம், மஸ்ஸல்கொட வீடமைப்புத் தொகுதியின் பொதுக் கிணறு மற்றும் பிட்டவல மயான நிலம் போன்ற சொத்துக்கள் மற்றும் 03 டெக்டர் டெய்லர்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சபையின் சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வீதிகளுக்குப் பெயரிடும் 62 பெயர் பதாதைகள் தயாரித்து பொருத்தும் செயற்றிட்டத்திற்காக தேவையான பொருட்களின் பகுப்பாய்வு தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதற்காக 114 சீமெந்து பக்கெட்டுக்கள் பயன்படுத்தப்பட்டதாக பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 3.87 கியூப் கொங்கிறீட் கற்கள் பயன்படுத்துவதற்கு பயிற்சி பெறாத மற்றும் அரைப் பயிற்சி மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர் ஈடுபடுத்தப்படவேண்டியிருந்த போதிலும் பயிற்சி பெற்ற 70 ஊழிய நாட்கள் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 230,750 செலுத்தப்பட்டிருந்தது. | சகல பொருட்களுக்காகவும் களஞ்சியத்திலிருந்து விநியோகக் கட்டளை விநியோகிக்கப்படல் வேண்டும். | நேர் ஊழியத்தின் கீழ் வேலைகள் மேற்கொள்ளும் போது பொருள் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும் சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கழிவுகளை சேகரிக்கும் போது உக்குகின்ற கழிவுகள் உக்காத கழிவுகளாக வேறு பிரித்து பெற்றுக்கொள்ளும் முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படாமை காரணமாக 100 பேர்ச் இனை உடைய ஹலவல வெத்திமராஜபுர கழிவுப் பொருள் தோட்டத்தில் உக்குகின்ற கழிவுகளுடன் பொலித்தீன் போன்ற உக்காத கழிவுகளும் போடப்பட்டிருந்தது. அவ்வாறு பொது மக்களினாலும் தனிப்பட்ட ரீதியில் உக்காத கழிவுகள் அந்தக் காணியில் போடப்பட்டிருந்ததுடன் அந்தக் காணிக்குப் புறம்பாக வேறு இடங்களிலும் கழிவுகள் போடப்பட்டமையிருந்தமையும் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கு எதிராக சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது கழிவுகள் உக்குகின்ற மற்றும் உக்காத வகையில் வேறு பிரிக்கப்பட்டு பெறப்படுகின்றது. | கழிவுப் பொருட்கள் தொடர்பாக முறையான திட்டமுறைமை ஒன்று தயாரித்தல் வேண்டும். |